**R 2488 (page 155)** தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்

# கேள்வி, பதில்கள்

## QUESTIONS AND ANSWERS.

கேள்வி: -- (2) கர்த்தருடைய ஜனங்கள் ஜீவியத்தின் கடமைகளிடமிருந்து வேதாகம ஆராய்ச்சிக்கென்றும், சத்திய ஊழியத்திற்கென்றும் எவ்வளவு நேரத்தினை எடுத்துக்கொள்ள வேண்டும்?

பதில்: -- கடமைகள் என்பது சிலசமயம் ஒன்றுக்கொன்று மோதுகின்றதாய் தோன்றலாம், ஆனால் அப்படியாக உண்மையில் இருப்பதில்லை. ஒரு கிறிஸ்தவனுடைய முதலாம் கடமை . . .

**R2488 : page 156**

அவனது சிருஷ்டிகரையும், கர்த்தரையும், அவனது எல்லா வழிகளிலும் இருதயப்பூர்வமாய் அங்கீகரித்திடுவதாகும். அவனது இரண்டாவது கடமை . . . அவன் ஒருவேளை கணவனாகவும், தகப்பனாகவும் இருக்கும் பட்சத்தில் . . . அவனது மனைவி மற்றும் பிள்ளைகளுக்கானதாகும்; அல்லது அவள் மனைவியாகவும், தாயாகவும் இருப்பாளாகில், அவளது கடமை . . . அவளது கணவன் மற்றும் பிள்ளைகளிடத்தில் இருக்கும். திவ்விய ஏற்பாட்டில் கணவன் குடும்பத்திற்கான தேவைகளைச் சந்திப்பவராக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றார் மற்றும் அவர் நோயின் காரணமாய் இயலாதவராய் இருந்தால் தவிர மற்றபடி எந்தக் காரணங்கள் நிமித்தமாகவும் அவர் இந்தக் கடமையினைப் புறக்கணித்தவராக இருக்கும் பட்சத்தில், அவர் திவ்விய பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாதவராகவே இருப்பார். அதுபோலவே மனைவியினுடைய முதலாம் கடமை பராமரிப்பதாகும்; அவளது கணவன் மற்றும் பிள்ளைகளுக்கான சௌகரியத்தையும், அவர்களை ஊக்குவிக்கிறதையும் பார்த்துக்கொள்கின்றாள். திவ்விய ஏற்பாட்டின்படி விவாக ஒப்பந்தமானது, ஒவ்வொரு கணவன் பெற்றிருக்கும் நேரத்தின் மீதும், ஒவ்வொரு மனைவி பெற்றிருக்கும் நேரத்தின் மீதும் அடமானமாகக் காணப்படுகின்றது - வெளியிலுள்ளவர்களுக்கு ஏதேனும் செய்யப்படுவதற்கு முன்னதாக, இந்த ஓர் அடமானத்தினுடைய கோரிக்கைகளானது நியாயமான விதத்தில் சந்திக்கப்பட வேண்டும்.

கர்த்தருடைய வார்த்தைகளைப் படிப்பது என்பது கிறிஸ்தவர்களுக்கான மாபெரும் சிலாக்கியமாக இருக்கின்றது; எனினும் பெரும்பான்மையாய் இப்படிப் படிப்பதாவது, எவ்வித நோக்கமின்றி செய்யப்படுகின்றது. படித்த காரியங்கள் அன்றாட வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தப்படவில்லையெனில், அது நேரத்தை வீணடித்ததாகவே இருக்கும். ஆண்டவருடைய சித்தத்தை அறிந்து மாத்திரம் இருப்பவனல்ல, மாறாக ஆண்டவருடைய சித்தத்தைச் செய்திடுவதற்குப் பொறுமையுடனும், விடாமுயற்சியுடனும் நாடுகிறவனே அங்கீகரிக்கப்படுவான் மற்றும் கிரீடத்தை வெல்லுவான். கிடைக்கப்பெறும் ஒவ்வொரு நியாயமான வாய்ப்புகளும் கர்த்தருடைய ஜனங்களினால், தெய்வீகத் திட்டம் குறித்த அறிவைப் பெற்றுக்கொள்வதற்காய் - அதுவும் பலிசெலுத்திகூட இவ்வறிவைப் பெற்றுக்கொள்வதற்காய்ப் பயன்படுத்தப்பட வேண்டும்; ஆனாலும் தான் பலிசெலுத்திடுவது மற்றவர்களுடைய நலன்களும், சௌகரியங்களுமாய்ப் பிரதானமாகக் காணப்படாமல், மாறாக தன்னுடைய நலன்களும், சௌகரியங்களுந்தான் பலிசெலுத்தப்படுகின்றதாவெனப் பார்த்துக்கொள்வதில் கர்த்தருடைய பிள்ளையானவன் கவனமாய் இருந்திட வேண்டும். மற்றவர்களுடைய நலன்களைப் பொருட்படுத்தாது இருந்து (நலன்களுக்கடுத்தவைகளைச் செய்யாமல்) நாம் வேதாகம ஆராய்ச்சிகளைப்பண்ணுகின்றோமானால், இது கர்த்தருடைய அன்பின் ஆவி அதிகமாய் உள்ளே வாசமாயிருக்கின்றது என்பதற்கு அறிகுறியாய் இராமல், மாறாக சுயநலத்திற்கான அறிகுறியாகவே இருக்கும்.

தெய்வீகத் திட்டம் குறித்த நம்முடைய ஆராய்ச்சிகளைக் கூடுமானமட்டும் நமக்குப் பிரயோஜனமானவைகளாக்கிட, நாம் நம்மைப் போஷிப்பதற்கென்று நேரத்தைச் செலவாக்கிடும் அதேவேளையில், மற்றவர்களுக்கும் சத்தியத்தைப் பகிர்ந்துகொடுப்பதில் தினந்தோறும் அதிகமான நேரம் செலவழித்திட வேண்டும் மற்றும் "எவன் தண்ணீர்ப் பாய்ச்சுகிறானோ, அவனுக்குத் தண்ணீர்ப் பாய்ச்சப்படும்" எனும் வேதவாக்கிய வார்த்தைகளின் உண்மையினைக் கிறிஸ்தவ அனுபவங்களானது நிரூபிக்கவே செய்துள்ளது; ஆகையால் கர்த்தருடைய ஊழியக்காரன் படிப்படியாக மற்றவர்களுக்குச் சத்தியத்தைப் பகிர்ந்துகொடுப்பதில் அதிகமதிக

ஆர்வம் அடைபவனாக இருப்பான் மற்றும் மற்றவர்களுக்குச் சத்தியத்தினைப் பகிர்ந்துகொடுப்பதற்கென ஆயத்தமாகுகையில் அல்லது மற்றவர்களுக்குச் சத்தியத்தைப் பகிர்ந்துகொடுக்கையில், கிருபையிலும், அறிவிலுமுள்ள தன் சொந்த வளர்ச்சியினைக் கண்டுகொள்பவனுமாயும் இருப்பான். ஜீவியத்தின் கடமைகள் விஷயத்திலும், சத்தியத்தினை மற்றவர்களுக்கு முன்வைப்பது தொடர்புடைய வாய்ப்புகளைப் பயன்படுத்திடும் விஷயத்திலும், சோம்பேறித்தனம், அலட்சியம் முதலானவை . . . நிச்சயமாய் ஆவிக்குரிய தரித்திரத்திற்கான அறிகுறியாகும். "அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்" என்னும் வேதவாக்கிய வார்த்தைகளைக் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் எப்போதும் தங்கள் மனங்களுக்கு முன்பாகக் கொண்டிருப்பது நலமாயிருக்கும்.

எவ்வளவு நேரம் கொடுக்கப்பட வேண்டும் என்ற கேள்விக்கு, ஆவியின் அனலைப் பொறுத்தே தவிர வேறு எந்தச் சட்டமும் போடப்பட முடியாது. ஆவியில் அனலுள்ளவர் கிட்டத்தட்ட அனைத்து நேரங்களிலும் - தன்னுடைய முழுப்பலத்தோடு, தன் கைக்கு அகப்படுகிறது எதுவோ அதைச் செய்துகொண்டே இருப்பார் - அதாவது மற்றவர்களுக்குப் பூமிக்கடுத்த விஷயங்களிலும், ஆவிக்கடுத்த விஷயங்களிலும் ஊழியஞ்செய்துகொண்டே இருப்பார்.

---

See more Books & Articles at www.foodfornewcreature.com